இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 08 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 02 – திங்கள்கிழமை 18 ஆகஸ்ட் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 08 : Thiruvalluvar Year - 2056 - Aavani 02 - Monday 18 August 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2025) தருமபுரியில், ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2025) தருமபுரியில், ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன் மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

## அமெரிக்காவில் இறக்குமதி வரி அதிகரிப்பு: கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள

# தமிழ்நாட்டின் வர்த்தகத்தை மீட்க நடவடிக்கை தேவை!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, ஆக. 18 -

**இந்தியப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியினை அமெரிக்கா உயர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வர்த்தகத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (16.8.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில், இரு நாடுகளுக்கும் பயனளிக்கக் கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டுவதாகவும், தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒன்றிய அரசின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போதைய 25% வரி மற்றும் அதன் தொடர்ச்சியாக 50% வரி அதிகரிப்பு காரணமாக கடுமையான தாக்கங்களை எதிர்கொள்வதால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் கவலை அளிக்கும் ஒரு பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் தாக்கம் அதிகமாக இருக்கும்!

கடந்த நிதியாண்டில், இந்தியாவின் மொத்த பொருட்கள் ஏற்றுமதியான $433.6 பில்லியன் மதிப்பிலான பொருட்களில் 20 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் $ 52.1 பில்லியன் பொருட்களில் 31 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இவ்வாறு அமெரிக்க சந்தையை தமிழ்நாடு அதிக மாகச் சார்ந்திருப்பதால், இறக்குமதி வரியின் தாக்கம், இந்தியா வில் உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கும் என்றும், இந்த வரிவிதிப்பு தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை மற்றும் வேலைவாய்ப்பில் குறிப்பிடத் தக்க பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரிவிதிப்பினால் ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல்ஸ், ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள், தோல், காலணிகள், கடல் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் துறைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்தத் துறைகள் அனைத்தும் அதிகத் தொழிலாளர்களை சார்ந்தவை என்பது இன்னும் கவலைக்குரியது என்றும், இதில் எந்தவொரு ஏற்றுமதி மந்தநிலையும் விரைவாக பெருமளவிலான பணி இழப்பு களுக்கு வழிவகுக்கும் என்றும் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார். 2024 - 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு 28% பங்களித்தது என்றும், இது இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் அதிகம் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

### 30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம்!

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 25% வரி மற்றும் முன்மொழியப்பட்டுள்ள 50% வரியின் காரணமாக, 30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளதாகவும், இந்த நெருக்கடியைத் தணிக்க, நமது ஏற்றுமதி போட்டித்தன்மைக்கு நீண்டகாலமாகத் தடையாக இருக்கும் கட்டமைப்பு சிக்கல்களைத் தீர்ப்பது அவசியம் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, பாதிக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த தொழில் அமைப்புகளுடன் தான் விரிவான ஆலோசனைகளை நடத்தியதாகவும்,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்





முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் – ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளினை முன்னிட்டு, நேற்று (17.8.2025 – ஞாயிற்றுக்கிழமை) காலை கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மலர் மாலை அணிவித்து, திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், முரசொலி பொது மேலாளர் எஸ்.இராசசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.